# இராமேஸ்வரம் நகர் மன்றக் கூட்டம்

# 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் தேதி காலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற

# நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: கே.இ. நாசர்கான்.,

## நகர்மன்றத் தலைவர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த கம்பேக்டர் வாகனம் TN65 AD 1837 பழுதாகி பயன் படுத்த முடியாத நிலையில் உள்ளதால், பொதுசுகாதாரப்பணிகளில் சுணக்கம் ஏற்படுகிறது. எனவே, மேற்படி வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய உரிய உள்ளூர் மற்றும வெளியூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரவும், பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.290000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. அனுமதிக்கலாம்,<br>2. பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 403 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td>2</td><td>

<u>(பொருள் எண் -01ல் உள்ள நிர்வாக அனுமதியின் படி)</u>

இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த கம்பக்டர் வாகனம் TN65 AD 1837 பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்வதற்கு விலைப்புள்ளிகள் 12-01-2023 தேதி கோரப்பட்டதில், மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>பழுது நீக்க தொகை</th></tr>
<tr><td>1</td><td>ASR Body Works Ltd</td><td>Rs.289405</td></tr>
<tr><td>2</td><td>Karpaga Vinayaga Auto Mobiles</td><td>Rs.297855</td></tr>
<tr><td>3</td><td>Sathguru Auto Mobiles</td><td>Rs.294580</td></tr>
</table>

அலுவலக குறிப்பு :-

1. அனுமதிக்கலாம்
2. பழுது நீக்கம் செய்ய குறைவான விலைவிகிதம் ASR Body Works Ltd நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

</td><td>தீர்மானம் எண். 404<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>3</td><td>இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண் 1க்குட்பட்ட சத்யா நகர் பகுதியில் உள்ள கழிப்பறை கட்டிடம் பழுதடைந்து பயன்பாடில்லாமல் இருந்து வருகின்றது. கழிப்பறை கட்டிடத்தினை பொது மராமத்து செய்திடவும் வேண்டியுள்ளது. அப்பகுதியில் உள்ள பொது கிணற்றினை தூர் வாரி சுத்தம் செய்திடவும் வேண்டியுள்ளது. மேற்காணும் பணிகள் செய்திட ரூ.3,30,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு நகர்மன்றத்தின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மானம் எண். 405<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம் 2022-23ம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் பொதுசுகாதார நலன் கருதியும் மன்றத்தின் அனுமதியினை ஏதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

</td><td></td></tr>
<tr><td>4</td><td>

இராமேஸ்வரம் நகராட்சிக்கு 2023-24-ம் நிதியாண்டு பொதுநிதியின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த மூன்று ஆண்டுகளுக்கு சேவை வழங்குநர்/முகவர்/ஒப்பந்ததாரர் தேர்வு செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.35945/2022/EA2-SWM-17 நாள்.10-01-2023-ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணிக்கு டன் ஒன்றிற்கு ரூ.4297.62/- வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.390.91 இலட்சம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து 25-01-2023-ம் தேதிய தீர்மானம் எண்.281-ன் படி ரூ.390.91 இலட்சம் நிதியினை பொதுநிதி மற்றும் 15th CFC SWM Tied Grant நிதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு செலவு மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27-03-2023 அன்று முதன்முதலாக மின்னனு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக வரப்பெற்றன.

<table>
<tr><td>1.</td><td>M/s Hand in Hand Inclusive Development and Services,<br>No.2, 2nd Floor, Parvatham House,<br>56th Street, 7th Avenue,</td><td>தொழில்நுட்ப தகுதிகள் இல்லை</td></tr>
</table>

</td><td>தீர்மானம் எண். 406 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | M/s. Sriram Labour Contract Security & Man Power Service, 7A Harvey Nagar Main Road, Arasaradi, Madurai-625016. | தொழில்நுட்ப தகுதிகள் இல்லை |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கலந்தாய்வுக்குழு மூலம் 28-03-2023 அன்று தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இல்லாததால், 25-04-2023 அன்று மறு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக வரப்பெற்றன.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கலந்தாய்வுக்குழு மூலம் 27-04-2023 அன்று தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால், 02-05-2023 அன்று மாலை 3.30 மணியளவில் விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) திறக்கப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**Name of work :- Selection of Service Provider/Agency/Contractor/Company for Implementation of Solid Waste Management activities in Rameswaram Municipality**

| | | |
|---|---|---|
| 1. | M/s Hand in Hand Inclusive Development and Services,<br>No.2, 2nd Floor, Parvatham House,<br>56th Street, 7th Avenue,<br>Ashok Nagar, Chennai – 83. | டன் ஒன்றிற்கு ரூ.4290/- |

| | | |
|---|---|---|
| | <table><tr><td>2.</td><td>M/s. Exsernet,<br>8 MM Complex, Kalpalam Road, Goripalayam,<br>Madurai-625002</td><td>டன் ஒன்றிற்கு<br>ரூ.4297/-</td></tr></table><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.001% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/s Hand in Hand Inclusive Development and Services, Chennai நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதியும், அரசின் திட்டப்பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று M/s Hand in Hand Inclusive Development and Services, Chennai நிறுவனத்தினை மேற்படி பணிக்கு Letter of Acceptance கடிதம் வாயிலாக 1% கூடுதல் டெபாசிட் தொகையினை வங்கி வரைவோலையாக (DD) செலுத்தக் கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| 5 | இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண் 5க்குட்பட்ட சங்குமால் சாலை அருகில் தினந்தோறும் சுமார் 300க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு சென்று வருகின்றனர். மேலும், அப்பகுதியில் தண்ணீர் வசதி இல்லாமல் இருப்பதால், கடலுக்கு சென்று வரும் மீனவர்கள் தங்களது அன்றாட தண்ணீர் தேவைக்கு மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.<br><br>எனவே, மேற்படி சங்குமால் சாலை அருகில் புதிதாக திறந்த வெளிக்கிணறு அமைத்து, அதன் மேல்தளப்பகுதியில் மூடி அமைத்து மற்றும் கிணற்றினை சுற்றிலும் தரைதளம் அமைத்திட | தீர்மானம் எண். 407<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ரூ.2,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>அனுமதிக்கலாம். | |
| **6** | இராமேஸ்வரம் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் JCB வாகனப்பதிவு எண் TN65 AD2652-ல் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், வாகனத்தினை இயக்க முடியவில்லை. மேலும், டயர்கள் – 4 எண்ணமும் தேய்மானம் ஏற்பட்டுள்ளதால் வாகனத்தின் அனைத்து பாகங்களும் பழுதாகி உள்ளது. எனவே இந்நகராட்சி அலுவலக ஓட்டுநரின் அறிக்கையின்படி கீழ்காணும் பழுதுகளை சரி செய்திட வேண்டியுள்ளது. விபரம் பின்வருமாறு.<br><br>1. Rear Tyre Kit – 16. 9 x 28 JCB<br>2. Front Tyre Kit - 9 x 16 wd<br>3. JCB Engine oil<br>4. JCB Rear Axle Oil<br>5. JCB Transmission Oil plus<br>6. Filter Kit 3D x (1000 Hrs)<br>7. Oring<br>8. Seal<br>9. Gasket -Suction STRA<br>10. AMC | தீர்மானம் எண். 408<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 11. JCB Hydraulic Oil.<br>12. Water Pump EFF DIA 114.03<br><br>மேற்சொன்ன பழுதுநீக்க பணிகளை சரி செய்திட ஆகும் உத்தேசசெலவினம் ரூ.1,55,000/- வரலாம். மன்றத்தின் பார்வைக்கும் நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், பொறியியல் பிரிவு மற்றும் சுகாதாரப் பணிகளின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **7** | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2021-22-ன் கீழ் 1985 மின் விளக்குகளை எல்.இ.டி மின்விளக்குகளாவும் 15வது நிதிக்குழு மானியம் (Un-Tied) 2021-22-ன் தலைப்பின் கீழ் புதிய 968 எல்.இ.டி மின் விளக்குகளாக அமைத்திடவும் M/S ECT Infra solutions Pvt Ltd நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி நிறுவனத்தின் மூலம் விநியோகம் செய்யப்படும் பொருட்களுக்கு M/S Trust Partner, Madurai நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளபடி தரம் ஆய்வு மற்றும் சரிபார்ப்பு செய்து சான்றிதழ் பெற்றிடும் பொருட்டு Third Party Agency நியமனம் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் கடிதம் எண்.35871/2021/SS2 நாள்.25-04-2023-ன் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதற்கான கட்டணத்தொகையினை செலுத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இராமேஸ்வரம் நகராட்சியில் மேற்சொன்ன பணிகளில் | தீர்மானம் எண். 409<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பயன்படுத்தப்படும் LED Lamps Fittings, Energy Saving Equipments such as Individual Lamp Monitoring Device (ILM), Street Light Controllers (SLC), CCMS மற்றும் அதன் தொடர்புடைய பொருட்களை மூன்றாம் தரப்பு நிறுவனமான M/S Trust Partner, Madurai நிறுவனத்தின் மூலம் தரம் ஆய்வு மற்றும் சரிபார்ப்பு சான்றிதழ் பெற்றிட ரூ.184535/- (GST வரி உட்பட) ஆகும். மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. அனுமதிக்கலாம். மேற்காணும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையினை 2023-24-ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும் அரசின் திட்டப்பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று M/S Trust Partner, Madurai நிறுவனத்திற்கு ரூ.184535/- தொகையினை செலுத்திட நடவடிக்கை தொடரலாம். | |
| **8** | கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-க்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விதிகள் 2023, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 84(1)ல், Five Percent of the Net Property Tax Payable by an Assessee, Subject to a Maximum of Five Thousand Rupees Shall be Granted as an Incentive, who has Paid the Property Tax With in Thirty Days From the date of Commencement of the half year. அதன்படி, சொத்து உரிமையாளர்கள் தங்களது 2023-24 ஆண்டின் முதல் அரையாண்டிற்கான சொத்துவரியினை ஏப்ரல் 30-ஆம் தேதிக்குள் செலுத்தும் சொத்து உரிமையாளர்கள் ஊக்கத் தொகை வழங்குவது தொடர்பாக இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான (1) நகராட்சி அலுவலகம் முகப்பு, (2) பேருந்துநிலையம் முகப்பு, (3) RDCC வங்கி அருகில், (4) | தீர்மானம் எண். 410 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
திட்டக்குடி சந்திப்பு ஆகிய நான்கு பகுதிகளில் அறிவிப்பு பலகைகள் வைப்பதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>M/s RNK Development & Construction Pvt LtD<br>புதுத்தெரு,<br>இராமேஸ்வரம்</td><td>ரூ.13300</td></tr>
<tr><td>P.N.சுந்தரம்<br>இத்தித்தெரு,<br>இராமேஸ்வரம்</td><td>ரூ.15300</td></tr>
<tr><td>ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஸன்,<br>இராமநாதபுரம்</td><td>ரூ.17300</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u>
<ol>
<li>மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s RNK Development & Construction Pvt Ltd நிறுவனத்தினை அனுமதிக்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>9</td>
<td>இராமேஸ்வரம் நகராட்சியில் 2022-23-ம் நிதியாண்டு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (Infrastructure and Amenities Fund) திட்டத்தின் கீழ் அக்னிதீர்த்தம் கடற்கரை முதல் துறைமுக வீதி வரை சுமார் 1400.00மீட்டர் நீளம் மற்றும் 16.00மீட்டர் அகலம் கொண்ட சாலை அமைக்கும் பணிக்கு கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் (Coastal Regulation Zone-CRZ) அனுமதி பெற வேண்டியுள்ளது. அதில், முதற்கட்டமாக மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் CRZ தொடர்பான</td>
<td>தீர்மானம் எண். 411<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அறிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப விளக்க காட்சிகளை தயார் செய்யும் பணிக்கு ரூ.8.85 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 26-04-2023-ம் தேதியின்று நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 17-05-2023 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. M/S ABC Techno Labs India Pvt Ltd, No:400, 13th Street, SIDCO Industrial Estate-North Phase Ambattur, Chennai-600 098 — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.20% குறைவு<br><br>2. M/S Environmental System Consultants and Ambiente Lab Solutions Pvt Ltd, 14, Shanmuga Naicker Street, KK Nagar, Chennai - 600 078.. — மதிப்பீட்டினைக்காட்டிலும் 1.33% அதிகம்<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.20% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S ABC Techno Labs India Pvt Ltd, Chennai நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br><br>2. அவசர அவசியம் கருதியும், பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |

| | | |
|---|---|---|
| 10 | **(பொருள் எண் -05ல் உள்ள நிர்வாக அனுமதியின் படி)**<br><br>இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண்.5க்குட்பட்ட சங்குமால் சாலை அருகில் புதிதாக திறந்த வெளிக்கிணறு அமைத்து அதன் மேல்தளப்பகுதியில் மூடி அமைத்து, தரை தளம் அமைக்கும் ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 02-05-2023-ம் தேதியின்று நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 18-05-2023 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. M/S RNK Developments & Constructions Pvt Ltd, இராமேஸ்வரம். — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.28% குறைவு<br><br>2. திரு.P.N.சுந்தரம், ஒப்பந்ததாரர், இராமேஸ்வரம். — மதிப்பீட்டினைக்காட்டிலும் 2.72% அதிகம்<br><br>**அலுவலக குறிப்பு :-**<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.28% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S RNK Developments & Constructions Pvt Ltd, இராமேஸ்வரம் நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம். | தீர்மானம் எண். 412<br><br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2. அவசர அவசியம் கருதியும், பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| 11 | தமிழக அரசின் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீறிய திட்டமான மாணவர்களின் காலை உணவுத்திட்டம் செயல்படுத்திட ஏதுவாக இராமேஸ்வரம் நகராட்சி பேருந்து நிலையம் பின்புறம் உள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடம் கட்டிடத்தில் உள்ள திறந்த வெளிக்கிணற்றினை, தூர்வாரி சுத்தம் செய்து அதன் மேல்தளப்பகுதியில் மூடி அமைத்திடவும், மோட்டார் மற்றும் குழாய்கள் பதித்து தண்ணீர் வசதி செய்திடும் ரூ.3.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 28-04-2023-ம் தேதியின்று நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 19-05-2023 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 413 அனுமதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 1. M/S RNK Developments & Constructions Pvt Ltd, இராமேஸ்வரம். | மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.34% குறைவு |
| 2. திரு.P.N.சுந்தரம், ஒப்பந்ததாரர், இராமேஸ்வரம். | மதிப்பீட்டினைக்காட்டிலும் 1.39% அதிகம் |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :-**<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.34% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S RNK Developments & Constructions Pvt Ltd, இராமேஸ்வரம் நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br><br>2. அவசர அவசியம் கருதியும், பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **12** | **<u>(பொருள் எண் -6ல் உள்ள நிர்வாக அனுமதியின் படி)</u>**<br><br>இராமேஸ்வரம் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் JCB வாகனப்பதிவு எண்.TN65 AD2652-ல் பழுதுநீக்கம் செய்யும் ரூ.1.55 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 05-05-2023 அன்று நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று 24-05-2023 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. M/S Jayaraj Automobile Agency's, Sidco Industrial Estate, Madurai Rameswaram Road, Ariyanedal Post, Paramakudi. — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.13% குறைவு<br><br>2. M/S Asiq Automobiles, Semmamadam, Rameswaram — மதிப்பீட்டினைக்காட்டிலும் 1.15% அதிகம் | தீர்மானம் எண். 414<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :-**<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.13% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S Jayaraj Automobile Agency's, Paramakudi நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br><br>2. அவசர அவசியம் கருதியும், சுகாதாரப்பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **13** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு 2022-23-ம் நிதியாண்டு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் பொதுநிதியின் கீழ் தொகுப்பு I தார் சாலைப்பணி ரூ.48.00 இலட்சமும், தொகுப்பு II சிமெண்ட் சாலைப்பணி ரூ.43.00 இலட்சமும் மற்றும் தொகுப்பு III சிமெண்ட் சாலைப்பணி ரூ.41.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.132.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.850/2023/பி2 நாள்.10-04-2023-ன் படி மேற்காணும் தொகுப்பு I தார் சாலை மற்றும் தொகுப்பு II மற்றும் தொகுப்பு III சிமெண்ட் சாலைப்பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகுப்பு I தார் சாலைப்பணிக்கு 22-05-2023 அன்று மின்னனு வாயிலாக மறுஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக வரப்பெற்றன.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கலந்தாய்வுக்குழு மூலம் 23-05-2023 அன்று தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப தகுதிகள் இருந்ததால், தொகுப்பு I தார் சாலைப்பணிக்கு 25-05-2023 அன்று மாலை 3.30 | தீர்மானம் எண். 415 அனுமதிக்கப்பட்டது. |

மணியளவில் விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**Name of work :- Providing BT Surface by using Paver Machine at Olaikuda (136004R203) – Package-I**

| | | |
|---|---|---|
| 1. | M/S IVR&CO,<br>11/225, B-10, அண்ணாசாலை காம்ப்ளக்ஸ்,<br>SS கோவில் தெரு,<br>பரமக்குடி. | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>0.10% குறைவு |
| 2. | M/S ஜீவானந்தம் கன்ஸ்ட்ரக்ஷன்,<br>4, அரண்மனை ராமசாமி,<br>கொத்தனார் மேலத்தெரு, | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>28.64% அதிகம் |

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.10% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S IVR&CO, பரமக்குடி நிறுவனத்தின் விலை விகிதத்தினை ஏற்கலாம்.
3. அவசர அவசியம் கருதியும், அரசின் திட்டப்பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளதால் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று M/S IVR&CO, பரமக்குடி நிறுவனத்தினை தொகுப்பு I தார் சாலைப்பணிக்கு Letter of Acceptance கடிதம்

| | | |
|---|---|---|
| | வாயிலாக 1% கூடுதல் டெபாசிட் தொகையினை வங்கி வரைவோலையாக (DD) செலுத்தக் கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **14** | இராமேஸ்வரம் நகராட்சி கணினிப் பிரிவில் பயன்படுத்தி வரும் பிரிண்டரில் உள்ள டோனர்கள் காலியாகி உள்ளதால் அதனை Refill செய்வதற்கும் மற்றும் கணினி வரி வசூல் மையத்திற்கு தேவையான புதிய VPN மோடம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ .18000/- ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி , நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 224/ 2016 /அ4 | தீர்மானம் எண். 416 அனுமதிக்கப்பட்டது. |
| **15** | இராமேஸ்வரம் நகராட்சியில், நம்புநாயகியம்மன் தலைமை நீரேற்று நிலையம், 11 எண்ணிக்கை நீர் உறிஞ்சு கிணறுகள் மற்றும் மோட்டார் அறைகளுடன் இயங்கி வரும் முக்கிய தலைமை நீரேற்று நிலையமாகும். மோட்டார் அறைகளில் மும்முனை இணைப்புடன் கூடிய 2HP திறன் கொண்ட மோட்டார்கள் 10-எண்ணிக்கைகளும் மற்றும் 12.5HP திறன் கொண்ட மோட்டார் 1- எண்ணிக்கையும் ஆக மொத்தம் {[(10X2HP)+12.5HP]=32.5HP]} பொருத்தப்பட்டு நீர் உறிஞ்சு கிணறுகளில் உள்ள தண்ணீரினை நீரேற்று நிலையத்தின் மையப்பகுதியில் உள்ள சேகரிக்கும் தொட்டிக்கு(COLLECTION SUMP) கொண்டு செல்கிறது. மையப்பகுதியில் உள்ள நீரேற்று | தீர்மானம் எண். 417 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | நிலையத்தில் 12.5HP திறன் கொண்ட மோட்டார்கள் 2-எண்ணிக்கைகளும் மற்றும் 20HP திறன் கொண்ட மோட்டார் 1-எண்ணிக்கையும் ஆக மொத்தம் {[32.5HP+(12.5HPX2)+20HP]=77.5HP} திறன்கள் கொண்ட மோட்டார்கள் மும்முனை இணைப்புடன் பொருத்தப்பட்டு இயக்கப்படுகிறது .<br>இத்தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து தான் திட்டக்குடி தரைதள தொட்டிகளுக்கும், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கும் மற்றும் நகரின் பெரும்பாலான பகுதிகளுக்கும் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், நடராஜபுரம் பகுதியில் உள்ள மின்மாற்றி மூலம் நம்புநாயகியம்மன் தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின் இணைப்பு எண். 05-307-008-24 மூலம் 23KW மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.<br>தற்போது நம்புநாயகியம்மன் தலைமை நீரேற்று நிலையத்தில் மின்சார விநியோகம் குறைவாக இயங்கி வருவதால் அதில் இயங்கி வரும் மோட்டார்களில் பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட சிரமம் ஏற்பட்டு வருகிறது.<br>மேலும், உள்ளூர் நீராதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு, கூடுதலாக 6 எண்ணிக்கை கொண்ட நீர் உறிஞ்சு கிணறுகள் மற்றும் மோட்டார் அறைகளுடன் 5HP திறன் கொண்ட மோட்டார்கள் ஆக மொத்தம்{(5HPX6)=30HP} இயக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். இந்நிலையில், தற்போது இயங்கி கொண்டிருக்கும் மின்மோட்டார்களின் திறன் 30HP ஆக மொத்தம் 107.5HP திறனுக்குரிய மின்மாற்றி ஒன்று மேற்படி நீரேற்று நிலையத்திற்கு அருகிலேயே அமைக்க வேண்டியுள்ளது.<br>எனவே, பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்திடும் வகையில் நம்புநாயகியம்மன் தலைமை நீரேற்று நிலையத்தின் மின் இணைப்பு எண்.05-307-008-24ல் இயங்கி வரும் மின் உற்பத்தி திறன் 23KW உடன் 20KW சேர்த்து ஆக மொத்தம் 43KWக்கு புதிதாக மின்மாற்றி அமைத்திட உதவி மின் பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி விநியோகக்கழகம், இராமேஸ்வரம் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. | |

<table>
<tr><td></td><td>இந்நிலையில், கூடுதலாக 20.00KW மின்சாரம் பெறுவதற்கு ரூ.58350/- தொகை செலுத்தக்கோரி வரப்பெற்றுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி விநியோக கழகத்தின் வலைதள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>1. அனுமதிக்கலாம். குடிநீர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. அவசர, அவசியம் கருதியும், பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்திட வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று ரூ.58350/- தொகையினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகத்திற்கு செலுத்தக்கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>16</td><td>இராமேஸ்வரம் நகராட்சி, பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அம்மா உணவகமானது 2015இல் துவங்கப்பட்டு இயங்கி வருகிறது. தற்போது அம்மா உணவகத்தில் சமையல் செய்ய பயன்படுத்தும் , கேஷ் அடுப்பு, மாவு அரைக்கும் கிரைண்டர், இட்டிலி சட்டி மற்றும் எரிவாயு செல்லும் குழாய்கள் பழுதடைந்துள்ளதாலும், 7 வருடங்களுக்கு மேல் கடந்த நிலையில் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதாலும், புதியதாக கேஷ் அடுப்பு, கிரைண்டர் , இட்லி சட்டி வாங்குவதற்கும், கேஷ் குழாய்கள் புதியதாக வாங்கி பதித்ததற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.230000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கும், மேலும் இப்பணி பொதுமக்களின் உணவு அத்தியாவசிய பணியாக இருப்பதால் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்கண்டவாறாக இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><table><tr><td>R.நந்தகுமார்<br>M/s RNK Development & Construction Pvt LtD<br>நடுத்தெரு, இராமேஸ்வரம்</td><td>ரூ.226218</td></tr></table></td><td>தீர்மானம் எண். 418 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | P.N.சுந்தரம்<br>ஒப்பந்ததாரர்<br>இத்தித்தெரு, இராமேஸ்வரம் — ரூ.248949<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br><br>1. மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.R.நந்தகுமார் என்பவரின் விலைவிகிதத்தினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 933/2023/சி1 | |
| **17** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் இராமேஸ்வரம் நகராட்சியில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் ஓராண்டு காலத்திற்கு காலை உணவு வழங்கும் திட்டப்பணிக்கு 19-05-2023 அன்று முதன்முதலாக மின்னனு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக வரப்பெற்றன. விபரம் பின்வருமாறு, | தீர்மானம் எண். 419 அனுமதிக்கப்பட்டது. |

| S.No | Name of Tenderer | Remarks |
|---|---|---|
| 1 | Hotel Ishwarya<br>Pandiyan S/o Thirunavukarasu,<br>25, Sannathi Street, Rameswaram | The Bidder has not submitted Bank Gurantee Certificate |

| | | |
|---|---|---|
| 2 | Hotel Balaji Ariyas<br>Chennai Main Road, GK Puram,<br>Thirunavalur, Vilupuram. | The Bidder has not submitted Bank Gurantee Certificate |
| 3 | Karishma Trading Corporation,<br>22/44, Pulipandian Street,<br>Jaihindpuram, Madurai | The Bidder has not submitted Bank Gurantee Certificate and EMD |

மேற்படி, வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண் (1) மற்றும் (2)ல் காணும் ஒப்பந்தப்புள்ளிகள் Bank Gurantee Certificate (for 50% Value of Work) சமர்ப்பிக்கவில்லை. மேலும், வரிசை எண்(3)ல் காணும் Karishma Trading Corporation நிறுவனம் Bank Gurantee Certificate (for 50% Value of Work) மற்றும் EMD சமர்ப்பிக்கப்படாததால், மேற்படி திட்டத்திற்கு 31-05-2023 அன்று குறுகிய கால மின்னனு வாயிலாக மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, 31-05-2023 அன்று மின்னனு வாயிலாக மறுஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு வாயிலாக வரப்பெற்றன. விபரம் பின்வருமாறு,

| S.No | Name of Tenderer | Remarks |
|---|---|---|
| 1 | Hotel Chettinad Mess,<br>2/225, Pillaiyar Kovil Street,<br>Devipattinam, Ramanathapuram-623 514. | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத்தொகை வரப்பெற்றது |
| 2 | Hotel Ishwarya<br>25, Sannathi Street,<br>Rameswaram – 623 526. | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத்தொகை வரப்பெற்றது |

| | | |
|---|---|---|
| 3 | Karishma Trading Corporation,<br>22/44, Pulipandian Street,<br>Jaihindpuram, Madurai | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத்தொகை வரப்பெறவில்லை. |

மேற்படி, வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில், வரிசை எண் (1) மற்றும் (2)ல் காணும் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத்தொகையினை வங்கி வரைவோலையாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும், வரிசை எண்(3)ல் காணும் Karishma Trading Corporation நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத்தொகையினை வங்கி வரைவோலையாக செலுத்தாத காரணத்தினால், அந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை நிராகரித்து, வரிசை எண் (1) மற்றும் (2)ல் காணும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கலந்தாய்வுக்குழு மூலம் தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு

| S.No | Name of Tenderer | Remarks |
|---|---|---|
| 1 | Hotel Chettinad Mess ,<br>2/225, Pillaiyar Kovil Street,<br>Devipattinam, Ramanathapuram-623 514. | தொழில்நுட்ப தகுதிகள் உள்ளது. |
| 2 | Hotel Ishwarya<br>25, Sannathi Street, Rameswaram – 623 526. | தொழில்நுட்ப தகுதிகள் இல்லை. |

மேற்படி, வரிசை எண்(2)ல் காணும் Hotel Ishwarya, Rameswaram நிறுவனம் Bank Gurantee Certificate (for 50% Value of Work) சமர்ப்பிக்காத காரணத்தினால், தொழில்நுட்ப தகுதிகளை நிறைவு செய்யாத காரணத்தினால், வரிசை எண்.(1)ல் காணும் Hotel Chettinad Mess, Devipattinam நிறுவனத்தின் விலைவிகிதப்பட்டியல் அடங்கிய உறையினை(Price Bid) 01-06-2023-ம் தேதியன்று

<table>
<tr>
<td></td>
<td>
திறக்கப்பட்டு, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>S.No</th><th>Name of Tenderer</th><th>Remarks</th></tr>
<tr><td>1</td><td>Hotel Chettinad Mess ,<br>2/225, Pillaiyar Kovil Street,<br>Devipattinam, Ramanathapuram-623 514.</td><td>ரூ.12.70<br>(நபர் ஒன்றுக்கு)</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு :-</u>

- மேற்படி வரப்பெற்ற Hotel Chettinad Mess, Devipattinam நிறுவனத்தின் விலைவிகிதம் மதிப்பீட்டினைக்காட்டிலும் குறைவான விலைவிகிதம் அளித்துள்ளதால் அந்நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.
- அவசர அவசியம் கருதியும், மேற்படி திட்டப்பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். .
</td>
<td></td>
</tr>
<tr>
<td>18</td>
<td>
<u>(பொருள் எண் -3ல் உள்ள நிர்வாக அனுமதியின் படி)</u>

இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண்.1 சத்யா நகர் பொதுக்கழிப்பறையினை பொதுமராமத்து செய்யும் ரூ.3.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 24-03-2023-ம் தேதியின்று நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 02-06-2023 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
</td>
<td>தீர்மானம் எண். 420<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1. M/S RNK Developments & Constructions Pvt Ltd,<br>இராமேஸ்வரம்.</td><td>மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>0.24% குறைவு</td></tr>
<tr><td>2. திரு.P.N.சுந்தரம்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமேஸ்வரம்.</td><td>மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>1.64% அதிகம்</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு :-</u>
<br><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.24% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S RNK Developments & Constructions Pvt Ltd, இராமேஸ்வரம் நிறுவனத்தின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.
<br><br>
2. அவசர அவசியம் கருதியும், பணியினை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>19</td>
<td>இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண்.11க்குட் பட்ட திருவள்ளுவர் நகர்-வா வா கொல்லை இணைப்பு சாலை குண்டும் குழியுமாக பழுதடைந்து உள்ளதால், பொதுமக்கள் நடந்து செல்லவும், வாகனங்கள் செல்ல முடியாமலும் இருந்து வருகிறது. எனவே, மேற்படி பகுதியில் புதிதாக சிமெண்ட் சாலை அமைத்திட ரூ.5,00,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண். 421 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td> <u>அலுவலக குறிப்பு :-</u>
<ol><li>அனுமதிக்கலாம். வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.</li>
<li>அவசர, அவசியம் கருதியும், பொதுமக்களின் போக்குவரத்து நலன் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</li></ol></td><td></td></tr>
<tr><td>20</td><td> இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டணக்கழிப்பறையினை 06/06/2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு நபர்கள் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரவில்லை. அதிகபட்ச ஏலக்கேள்வி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>திரு.R. நாகநாதன்,<br>கெந்தமாதன பர்வதம்,<br>இராமேஸ்வரம்</td><td>219000</td></tr>
<tr><td>திரு.V.சுரேஷ்,<br>கெந்தமாதன பர்வதம்,<br>இராமேஸ்வரம்.</td><td>220000</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u>
<ul><li>அதிகபட்ச ஏலக்கேள்வி ரூ. 220000 கேட்டுள்ள ஏலதாரர் திரு.V.சுரேஷ், கெந்தமானத பர்வதம் என்பவரின் ஏலக்கேள்வியினை ஏற்கலாம்</li></ul></td><td>தீர்மானம் எண். 422 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | • பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் . | |
| **21** | இராமேஸ்வரம் நகராட்சியில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் இதர அறிவிப்புகளை தினசரி நாளிதழ்களில் வெளியீடு செய்வதற்கான ஒரு வருடத்திற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br><br>1. பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 423 அனுமதிக்கப்பட்டது. |
| **22** | இராமேஸ்வரம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் , சுகாதாரப்பணிக்கு , கீழ்காணும் விபரப்படி பொதுசுகாதாரப்பொருட்கள் தேவைப்படுவதால், அதனை வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும், பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்திட நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 424 அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1 | பிளிச்சிங் பவுடர் | 6 டன் |
| 2 | நீர்த்த சுண்ணாம்பு | 15 டன் |

<table>
<tr><td></td><td>

<u>**அலுவலக குறிப்பு :-**</u>

- அனுமதிக்கலாம்
- பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

</td><td></td></tr>
<tr><td>

**23**

</td><td>

<u>**(பொருள் எண் -22ல் உள்ள நிர்வாக அனுமதியின் படி)**</u>

இராமேஸ்வரம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான கீழ்காணும் விபரப்படி பொதுசுகாதாரப்பொருட்களை விநியோகிக்க ஒப்பந்தப்புள்ளிகள் 30-05-2023 தேதி கோரப்பட்டதில், இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th rowspan="2">வ.எண்</th><th rowspan="2">பொருட்களின் பெயர்</th><th colspan="2">BEST ENGINEERINGS</th><th colspan="2">SRI SAIRAM AGENCIES</th></tr>
<tr><th>விலை விகிதம்</th><th>அளவு</th><th>விலை விகிதம்</th><th>அளவு</th></tr>
<tr><td>1</td><td>பிளிச்சிங் பவுடர்</td><td>58</td><td>1கி</td><td>60</td><td>1கி</td></tr>
<tr><td>2</td><td>நீர்த்த சுண்ணாம்பு</td><td>9</td><td>1கி</td><td>10</td><td>1கி</td></tr>
</table>

<u>**அலுவலக குறிப்பு :-**</u>

1. அனுமதிக்கலாம்
2. வரிசை எண் (1) முதல் (2) வரையிலான பொருட்களுக்கு குறைவான விலைவிகிதம் BEST ENGINEERINGS நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

</td><td>

தீர்மானம் எண். 425

அனுமதிக்கப்பட்டது

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 3. பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, சப்ளை உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| **24** | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 13/04/2023ம் தேதிய காணொளிக்காட்சி ஆய்வுக்கூட்ட அறிவுரையில், போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக நகராட்சிகளில் நூலகங்கள் மற்றும் அறிவு சார் மையங்கள் ஏற்படுத்திட விரிவான திட்ட அறிக்கையுடன் கருத்துரு தயார் செய்து சமர்ப்பித்திட தெரிவிக்கப்பட்டது.<br>மேற்படி, அறிவு சார் மையம் கட்டுவதற்கு தேவைப்படும் குறைந்த பட்ச அளவு 32.00 மீ நீளம் மற்றும் 36.00 மீ அகலம் என தேவைப்படுவதால், வார்டு எண் 03 சல்லிமலைப்பகுதியில் அரசு புறம்போக்கு நிலமான சர்வே எண் 417/2இல் 30 செண்ட் இடம் ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. சல்லிமலைப்பகுதியில் அரசு புறம்போக்கு நிலமான சர்வே எண் 417/2இல் 30 செண்ட் இடமானது நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளதால், இப்பகுதியில் அமைக்கப்படும் அறிவு சார் மையம் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதாலும், சம்பந்தப்பட்ட நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் தக்க வழியாக கருத்துரு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 426<br>அனுமதிக்கப்பட்டது |
| **25** | இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் பகுதியினை இணைக்கும் அன்னை இந்திரா காந்தி எனப்படும் 2345மீ நீளம் கொண்ட பாம்பன் பாலத்தில் பொதுமக்களின் நடமாட்டத்தை எளிதாக்குவதற்கு மின்விளக்கு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பாலத்தின் வழியாக செல்லும் வாகனங்களுக்கு தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலம் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு, மின்விளக்கு பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதனைத்தொடர்ந்து, 25-01-2017 முதல் பாம்பன் பாலத்தில் சுங்கக் கட்டணம் வசூலிப்பது நிறுத்தப்பட்டது. தேசிய நெடுஞ்சாலைத்துறையிடம் எந்த வசதியும் இல்லாததால், பாம்பன் பாலம் | தீர்மானம் எண். 427<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மின்விளக்கு வசதிகள், மின் கட்டணம் மற்றும் கூடுதல் பராமரிப்பு போன்ற உள்ளிட்ட வசதிகளை மண்டபம் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் பாம்பன் பாலம் கிராம பஞ்சாயத்து வரம்பிற்கு உட்பட்டு வருவதால், உள்ளாட்சி அமைப்புகளின் செலவினங்களை சமாளிக்க மாநில அரசு மானியம் வழங்குகிறது. மேலும், இராமேஸ்வரம் நகராட்சி சுற்றுலா வாகனங்களுக்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.<br>எனவே, இராமேஸ்வரம் நகராட்சி மூலம் பாம்பன் பாலம் மின்விளக்கு வசதிகள், மின் கட்டணம் மற்றும் கூடுதல் பராமரிப்பு போன்ற உள்ளிட்ட வசதிகளை கையகப்படுத்திடவும், 2016-2022 வரை நிலுவையில் உள்ள மின்கட்டணத்தொகையினை செலுத்திடவும் துணைச்செயலாளர், தேசிய நெடுஞ்சாலைத்துறை அவர்களிடமிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கட்கு இதன்படி கடிதம் வரப்பட்டது.<br>அதனைத்தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.37370/2022/எம்.ஏ1 நாள்:16-12-2022-ன் படி நிலுவையில் உள்ள மின்கட்டணத்தொகை செலுத்துதல், மின்விளக்கு வசதி மற்றும் பராமரிப்பு போன்ற உள்ளிட்ட வசதிகளை இந்நகராட்சி மூலம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேலும், தற்போது நகராட்சி எல்லையில் சுங்கக் கட்டணம் சுமார் 17 வருடங்களாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதன் மூலம் பெறப்படும் தொகையில் இந்நகரில் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றது. எனவே, இராமேஸ்வரம் நகராட்சி மூலம் சுங்கக் கட்டணம் வசூல் செய்வதற்கு அரசின் ஆணை பெற்றிடவும், நகராட்சி மூலம் சுங்கக் கட்டணம் வசூலிப்பதால், பாம்பன் பாலத்தில் உள்ள மின்விளக்குகளை பராமரிக்கவும், மின் கட்டணம் செலுத்தவும் நகராட்சி மூலம் மேற்கொள்ள இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.27/2021/அ3 நாள்.20-01-2023-ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கட்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.<br>இந்நிலையில் 23-06-2023-ம் தேதியில் தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழிக்குழு மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வுப்பணி மேற்கொண்ட பிறகு, நடந்த ஆய்வுக்கூடத்தில் மேற்படி பாம்பன் | |

| | | |
|---|---|---|
| | பாலத்தில் உள்ள மின்விளக்குகளின் மின்கட்டணத்தை உடனடியாக செலுத்திட அறிவுறுத்தப்பட்டது. மேலும், 24-06-2023-ம் தேதியில் இராமேஸ்வரம் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற தீவு அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களால் மேற்படி நிலுவையில் உள்ள மின்கட்டண தொகையினை செலுத்திட தெரிவிக்கப்பட்டது.<br>எனவே, அவசர அவசியம் கருதியும், இராமேஸ்வரம் சுற்றுலா தளத்தினை பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கண்டு களிக்கும் வகையில் மேற்படி பாம்பன் பாலம் உறுதுணையாக இருப்பதால், அதில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்கு பராமரிப்பு, பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் நிலுவையில் உள்ள மின்கட்டணத்தொகை ரூ.27,85,999/-ஐ செலுத்திட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. சுங்க கட்டணத்தொகையிலிருந்து மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ளலாம்.<br>2. கோட்டப்பொறியாளரை (தேசிய நெடுஞ்சாலைத்துறை) பாம்பன் பாலத்தில் உள்ள அனைத்து விளக்குகளும் ஒளிரும் நிலையில் நகராட்சி வசம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளலாம்.<br>3. மின்கட்டணத்தொகை செலுத்திய பிறகு நகராட்சி நிர்வாக இயக்குநரை அரசின் பின்னேற்புக்கு பெற ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். | |
| **26** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமான வாகன நுழைவுகட்டணம் வசூல் செய்யும் உரிமம் கடந்த 2020-2021ம் நிதியாண்டில் ரூ.32779999/- ஏலம்விடப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரால் தொடர்ந்து நடத்த முன்வராததால், நகராட்சி நிர்வாகத்தின் மூலம் வசூல் செய்யப்பட்டுவருகிறது.<br>அதனை தொடர்ந்து 14/12/2022 அன்று முதன் முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அரசாங்க மதிப்பாக வருடத்திற்கு ரூ.4,30,00,000/- கோரியதில், 3 நபர்கள் கலந்து கொண்டும் ஏலக்கேள்விகள் ஏதும் எழவில்லை. அதனை தொடர்ந்து 04/01/2023 அன்று இரண்டாவது முறையாக நடத்தப்பட்ட பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் அரசாங்க மதிப்பாக வருடத்திற்கு ரூ.4,10,00,000/ என | தீர்மானம் எண். 428 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | குறைக்கப்பட்டபோதிலும், 2 நபர்கள் கலந்து கொண்டும் ஏலக்கேள்விகள் ஏதும் எழவில்லை. மீண்டும் 3வது முறையாக 29/03/2023 அன்று நடத்தப்பட்ட பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் அரசாங்க மதிப்பாக வருடத்திற்கு ரூ.3,70,00,000/ என குறைக்கப்பட்டபோதிலும், 4 நபர்கள் கலந்து கொண்டும் ஏலக்கேள்விகள் ஏதும் எழவில்லை, இந்நிலையில் 2020-2021ம் நிதியாண்டு குத்தகை தாரரால் ஏற்கனவே பொது ஏலத்தில் எடுக்கப்பட்ட தொகை ரூ.32779999/- ஐ அரசு ஆரம்ப மதிப்பு தொகையாக நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். | |

(ஒம்) திரு.கே .இ. நாசர்கான்,

நகர்மன்றத்தலைவர்

இராமேஸ்வரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,

,நகராட்சி இராமேஸ்வரம்.